# உங்கள் பிள்ளை மொழி பயில்வதற்கு உதவுங்கள்

## வாசிக்கும்போது பிள்ளையுடன் உரையாடுங்கள்

### குடும்ப கல்வித்திறமை

வாசித்தல், எழுதுதல், அவதானித்தல், உரையாடுதல் என்பவை குடும்பங்கள் ஒருங்கிணைந்து செய்பவையாகும்.

**வாசித்தல்/ கற்பனை செய்தல்/ படித்தல்** (LIR) மொன்றியல் சிறுவர் வைத்தியசாலையும் கல்வித்திறமை நிலையமும் ஒருங்கிணைந்து, பிள்ளைகளின் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் உள்ள தொடர்பை வலியுறுத்தி கல்வியை ஊக்குவிக்கும் ஒரு திட்டத்தை மேற்கொண்டு ள்ளார்கள். இது வைத்தியசாலையின் குடும்ப நலத்திட்டத்துடன் தொடர்பு கொண்டது.



**2 – 6 வயதுள்ள பிள்ளைகளுக்கு**

பிள்ளைகள் மொழியை கற்றுக்கொள்ள திறமையான வழி அவர்களுடன் உரையாடுவதாகும். அவர்களுடன் வாசிப்பது புதிய சொற்களையும் கருத்துக்களையும் பயிற்றுவிக்க உதவும்.

பிள்ளைகளுடன் புத்தகங்களைப்பார்த்துக் கொண்டு வாசித்து அதுபற்றி உரையாடுவது அவர்களுடைய சொல்லறிவு, இலக்கண அறிவு என்பவை மேம்பட வழிவகுக்குமென ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இதற்குப்பெயர் **வாசிப்பதும் உரையாடுதலும்** ஆகும்.

ஒரு பிள்ளைக்கு குறிப்பிட்ட ஒரு புத்தகம் எவ்வளவு பரிச்சயமாகிறதோ, அந்தளவிற்கு வாசித்து உரையாடுதலை பயன்படுத்தலாம். எனவே பிள்ளை வேறு ஒரு புத்தகத்தை கேட்கும்வரை ஒரே புத்தகத்தை மீண்டும் மீண்டும் வாசியுங்கள்.

### வாசிப்பதும் உரையாடுதலும் ஆரம்பிக்க நான்கு இலகுவான வழிகள்

இதற்கு சித்திரங்கள் உள்ள புத்தகம் அவசியம்

**1.** புத்தகப்பக்கத்தில் என்ன நடக்கிறது என்பதை பிள்ளையிடம் கேளுங்கள். கீழ்வரும் ஒன்றை முயற்சியுங்கள்.

படத்தில் என்ன நடக்கிறது என பிள்ளையிடம் கேளுங்கள், உதாரணமாக **“ படத்தைப்பற்றி சொல்லு.”**

படத்தில் ஏதாவது ஒன்றைப்பற்றி கேளுங்கள் உதாரணமாக **“ பையன் எங்கே சென்றார்.”**

படத்திலுள்ள ஏதாவது ஒன்றை அவருக்கு நடந்த ஏதாவது ஒரு சம்பவத்தோடு தொடர்பு படுத்தச்சொல்லுங்கள். உதாரணமாக **“ஒருமுறை நீ ஊஞ்சலில் இருந்து சேற்றுக்குள் விழுந்த ஞாபகம் இருக்கிறதா?”**

புத்தகப்பக்கத்தில் நடக்கும் ஏதாவது ஒன்றை விபரியுங்கள் ஆனால் சொல்லி முடிக்க வேண்டாம், பிள்ளையை முடிக்க விடுங்கள் **“அதோ பார்! நாய்க்குட்டி சிக்கி............”**

ஏற்கனவே படித்து முடித்த புத்தகத்தில் ஏதாவது ஒன்றை பிள்ளையை ஞாபகப்படுத்தச் சொல்லுங்கள்.

**2,“ அவருக்கு யார் உதவி செய்தது என ஞாபகம் இருக்கிறதா?.”** பிள்ளை பதில் சொல்லும்போது நீங்கள் ஏதாவது சொல்லுங்கள்”**சரியாகச் சொன்னாய்.”**

**3.** பிள்ளையின் பதிலை மறுபடி கூறுவதோடு மேலும் ஒரு செய்தியையும் சேர்த்துச் சொல்லுங்கள், உதாரணமாக,
பிள்ளை: **"சேற்றுக்குள்..."**
பெற்றார்: **"ஆம், சேற்றுக்குள் விழுந்தான்."**

**4.** நீங்கள் சேர்த்துச்சொன்னதை மீண்டும் சொல்லி பிள்ளை அதிலிருந்து ஏதாவது கற்றிருக்கிறாரா என உறுதிப்படுத்துங்கள், உதாரணமாக, "**பாவம் அவன் சேற்றுக்குள் விழுந்து விட்டான்.**"

**வாசித்து உரையாடுதல் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு:**

Reading With Your Child Booklet – Tamil

http://www.booktrust.org.uk/books/children/how-to-share-books/

**LIR பற்றிய மேலதிக விபரங்களுக்கு**

http://www.thechildren.com/en/patients/lire-imagine-read-project

Projet d'alphabétisation HME
MCH Literacy Project

Hôpital de Montréal pour enfants
Centre universitaire de santé McGill

Montreal Children's Hospital
McGill University Health Centre